1968 ஆகஸ்ட் 24]

திருநெல்வேலி-கன்னியாகுமரி சாலே

*** 92 வினு—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடை யளிப்பாரா—

திருநெல்வேலி—கன்னியாகுமரி நெடுஞ்சாலேயை அகலப்படுத்தி சிமெண்ட் ரோடு போடுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனேயிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அவ்வித செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனேயில் இல்லே.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலேவர் அவர்களே, திருநெல்வேலி, கன்னியா குமரி, நாகர்கோயில் ரோடுகளில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் ஓடுகின்ற சில பகுதிகளில் மிகவும் ஆபத்தான வளேவுகள் இருப்பதால், அரசினர் அதைச் சீர்படுத்தி நேர்வழியாகச் செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : கேள்வி திருநெல்வேலி—கன்னியா குமரி நெடுஞ்சாலேயை அகலப்படுத்தி, சிமெண்ட் கான்க்ரீட் போடுவதைப் பற்றியது. ரோடுகளில் சில பகுதிகளில் ஆபத்தான வளேவுகள் இருக்கின் றன என்று உறுப்பினர் கூறினுர். வளேவாக இருக்கின்ற பகுதிகளேச் சீர்படுத்தி, நேர்வழியாக மாற்ற இடையிலுள்ள சில நிலச் சொந்தக்காரர் களின் அனுமதி தேவை. நிலச்சொந்தக்காரர்களின் அனுமதி கிடைத் தால், அதையெல்லாம் ஆராய்ந்து கனம் உறுப்பினர் கூறிய யோசனே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

DR. H. V. HANDE : Sir, does this not come under National Highway 7—from Madras to Kanyakumari—and if so, does this Government get some funds from the Centre for maintaining this road and what are the steps taken by this Government to properly maintain this road because there are a number of patches and potholes here and there. So, will this Government in consultation with the Central Government see that it is properly maintained because it is a National Highway ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இந்தச் சாலேகளுக்கான பராமரிப்புச் செலவுகளேப் பொறுத்து இந்த அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டி ருக்கிறது. சிமெண்ட் கான்க்ரீட் ரோடுகள் அமைப்பது மூன்ருவது ஐந் தாண்டுத் திட்டத்தில் முதன்மை ஸ்தானம் பெறவில்லே. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதற்கு முதன்மை ஸ்தானம் அளிக்கப்பட வில்லே. நெடுஞ்சாலேகளேப் பொறுத்த வரையில் மத்திய அரசு, மாநில அரசு ஒரு முறையான கொள்கையை வகுத்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலேவர் அவர்களே, தூத்துக்குடி ஒரு பெரிய துறைமுகமாக விஸ்தரிக்கப்படுகின்ற காரணத்தினுல், இந்தச் சாலேயை விஸ்தரிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசாங்கத் தைக் கேட்டுக்கொள்ளுமா ? அதற்கான வழிவகை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : எதிர்க்கட்சித் துணைத் தலேவர் அவர்களுடைய அபிப்பிராயத்தை அடிப்படையாக வைத்து இந்த அரசு தூத்துக்குடி துறைமுகத்தைச் சுற்றியுள்ள சாலேகளே விரிவுபடுத்துவதன் அவசியத்தை மத்திய அரசுக்கு தெரியப்படுத்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் : இப்பொழுது வினுக்கள் 121, 122, 123, 124 தள்ளிவைக்கப்படுகின்றன.